# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1985 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஓய்வூதிய (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1985, ஓகத்து மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1985, ஓகத்து மாதம் 09 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30

தபாற் செலவு : சதம் 60

# 1985 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஓய்வூதிய (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1985 ஓகத்து மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 28/84

**ஓய்வூதியம் வழங்கும் நோக்கத்திற்காகப் பிரித்தானிய அரசாங்கத்தின் அல்லது இலங்கையிலுள்ள அவர்களின் தளங்களில் சிவில் ஊழியர்களினதும் முன்னைநாட் சேவையாட்களினதும் சேவைகளைக் கணிப்பதற்காகவும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது 1985 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஓய்வூதிய (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

முன்னைய சேவை ஓய்வூதியத்திற்காகக் கணிக்கப்படுதல் வேண்டும்.

2. (முந்நூற்றைம்பத்தேழாம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டம், (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம், (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டம் ஆகியவற்றில், அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் அல்லது ஓய்வூதியம் பற்றிய குறிப்புக்களில் எது எவ்வாறிருப்பினும்—

(அ) இலங்கையிலுள்ள முன்னைய பிரித்தானிய சேவைகள் தாபனங்களில் பிரித்தானிய அரசாங்கத்தின்கீழ் சிவில் ஊழியராக ஆற்றிய சேவை ; அல்லது

(ஆ) பிரித்தானிய அரசாங்கத்தின் அல்லது இலங்கையிலுள்ள அவர்களின் தளங்களில் ஆயுதப்படைகளிலான சேவை,

அவர்களது ஊழியத் தேதியிலிருந்து அல்லது 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் 3 ஆம் தேதியிலிருந்து, இவற்றுள் எத்தேதி பிந்தியதோ அத்தேதியிலிருந்து, அத்தகைய ஒழுங்குவிதிகளின்கீழ் அல்லது குறிப்புக்களின்கீழ் எச்சேவை தொடர்பில் ஓய்வூதியம் வழங்கப்படற்பாலதோ அச்சேவையுடன் சேர்த்து ஓய்வூதிய நோக்கங்களுக்காக கணிக்கப்படுதல் வேண்டும்.

ஓய்வூதியத்தை மீளாய்தல்.

3. பிரித்தானிய அரசாங்கத்தின் அல்லது இலங்கையிலுள்ள அவர்களின் தளங்களில் சிவில் சேவையையுடையவரான அல்லது ஆயுதப்படைகளிலான சேவையையுடையவரான எவரேனுமாள் ஓய்வுபெற்றிருந்து ஓய்வூதிய நோக்கத்துக்காக அத்தகைய சேவை கணிக்கப்படாமல் அவரது ஓய்வூதியம் கணக்கிடப்பட்டிருக்குமிடத்து, இச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படியான நன்மைகளை அளிக்கும் வகையில் அத்தகைய ஆளின் ஓய்வூதியம் மீளாயப்படுதல் வேண்டும்.

செலுத்தப்பட்ட பணிக்கொடையின் கழிவு.

4. பிரித்தானிய அரசாங்கத்தின் அல்லது இலங்கையிலுள்ள அவர்களின் தளங்களில் சிவில் சேவையையுடையவரான அல்லது ஆயுதப்படைகளிலான சேவையையுடையவரான எவரேனுமாள் தொடர்பில் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் ஏதேனும் பணிக்கொடை செலுத்தப்பட்டிருக்குமிடத்து, அவரது ஓய்வூதியம் அவ்வாறு மீளாயப்பட்டதன் விளைவாக மாற்று பணிக்கொடையாக அல்லது ஓய்வூதியமாக அத்தகைய ஆளுக்கு வருமதியாகவுள்ள ஏதேனும் கொடுப்பனவிலிருந்து அத்தகைய பணிக்கொடையானது கழிக்கப்படற்பாலதென்பதுடன், திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

ஏ 084074—2,825 (08/85)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.